**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்.**

**முன்னிலை : திரு.வீ.காளிதாசன், பி.காம்.,எல்.எல்.எம்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்.**

**2025 ஆம் ஆண்டு, ஜீன் மாதம் 24–ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**இடைநிலை மனு எண்.6/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.113/2008**

என். சக்திவேல்

... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. மாறப்ப கவுண்டர் (இறந்துவிட்டார்)
2. நாச்சிமுத்து
3. பரமேஸ்வரன்
4. ரஞ்சித் குமார்
5. கே. சுப்ரமணியம்
6. மல்லிகா தர்மராஜ்
7. கருப்பாத்தாள் (இறந்துவிட்டார்)
8. மயிலாத்தாள்
9. லட்சுமி
10. அருண்குமார்
11. விஸ்வநாதன்
12. கணேசன்
13. ராமசாமி
14. தினேஷ் குமார்

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 09.06.2025 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பி.பி.சுரேஷ்குமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.மகேசன் அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## <u>உத்தரவு</u>

மனுவில் கண்டுள்ள விபரப்படி வழக்குரையை திருத்தம் செய்யது கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### <u>1. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–</u>

வழக்கு நிலுவையில் உள்ளபோது, 1ம் எதிர்மனுதாரர் பல ஆவணங்களை உருவாக்கியுள்ளார். மேற்படி விவரம் தற்போது தான் மனுதாரருக்கு தெரியவந்துள்ளது. உண்மையில் வழக்கிற்குப் பிறகு, 10வது எதிர்மனுதாரர் 26.05.2008 தேதியன்று 1வது எதிர்மனுதாரரிடமிருந்து போலியான கிரைய பத்திரத்தைப் பெற்றுள்ளார். மேலும் 1வது மற்றும் 10வது எதிர்மனுதாரர்கள், 11வது எதிர்மனுதாரருக்கு ஆதரவாக 22.06.2009 தேதியிட்ட போலியான கிரைய பத்திரத்தைச் செய்து கொடுத்துள்ளார்கள். மேலும் 1ம் எதிர்மனுதாரர் அதிகார முகவர் மூலம் 09.02.2011 தேதியன்று 12வது எதிர்மனுதாரருக்கு ஆதரவாக மற்றொரு போலியான கிரைய பத்திரத்தை உருவாக்கியுள்ளார். அதன் பிறகு மீண்டும் 11ம் எதிர்மனுதாரர் 30.08.2011 தேதியன்று 12ம் எதிர்மனுதாரரிடமிருந்து போலியான கிரைய பத்திரத்தைப் பெற்றுள்ளார். மேலும்

11ம் எதிர்மனுதாரர், 30.11.2011 தேதியன்று 10ம் எதிர்மனுதாரரின் தந்தையான 13ம் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக போலி மற்றும் பெயரளவு கிரைய பத்திரத்தை உருவாக்கியுள்ளார். அதன் பிறகு 5ம் மற்றும் 6ம் எதிர்மனுதாரர்கள் 09.11.2022 தேதியன்று 14ம் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக போலியான கிரைய பத்திரத்தை உருவாக்கியுள்ளனர். உண்மையில் 5ம் மற்றும் 6ம் பிரதிவாதிகள் சமரசத்திற்கு அழைப்பு விடுத்து, வழக்குத் தகராறைத் தீர்த்து வைப்பதாக உறுதியளித்தனர் மற்றும் சமரச பேச்சுவார்த்தைக்கான ஆவணங்களில் கையெழுத்திட கட்டாயப்படுத்தியுள்ளனர். நேர்மையான முறையில், மனுதாரரும், அவரது அம்மாவும் அவர்கள் காட்டிய ஆவணங்களில் கையெழுத்திட்டுள்ளார்கள். அதன் பிறகு மனுதாரருக்கு சந்தேகம் ஏற்பட்டு, வில்லங்கச் சான்றிதழுக்கு விண்ணப்பித்த போது, வாதியின் பங்கை சட்டவிரோதமாக ஏமாற்றும் நோக்கில் பிரதிவாதிகள் போலியான மற்றும் பெயரளவு மற்றும் செல்லாத ஆவணங்களை உருவாக்கியதை அறிந்துள்ளார். வழக்கு நிலுவையில் உள்ள போது, 10 முதல் 14 வரையிலான எதிர்மனுதாரர்கள் வழக்குச் சொத்தின் மீது சட்டவிரோதமாக போலியான ஆவணங்களை உருவாக்கியுள்ளனர். எனவே, 10 முதல் 14 வரையிலான பிரதிவாதிகள் வழக்குப் பிரச்சினையைத் தீர்மானிக்க முறையான மற்றும் நியாயமான தரப்பினர் ஆவர். மேலும், இந்த நீதிமன்றம் 31.01.2025 தேதியிட்ட இடைநிலை மனு எண்.4/2023 இல் பிறப்பித்த உத்தரவின்படி, இந்த வழக்கில் 10 முதல் 14 வரையிலான பிரதிவாதிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே, மனுவில் கூறப்பட்டுள்ள வழக்கைத் திருத்த வேண்டுமென்பதே மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள மனுவின் சுருக்கமாகும்.

**2. 10ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 8 மற்றும் 13 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-**

மேற்படி மனுவானது சட்டப்படி பொய்யானது மற்றும் நிலைக்கதக்கதல்ல. ஏற்கனவே 9-வது எதிர்மனுதாரர் திருப்பூர் 1வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில்

தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கான அசல் வழக்கு எண்.50/2011–ல் இறுதி நிலை தீர்ப்பாணை IA.No.153/2017 மனுவில் கடந்த 01.09.2022 தேதியில் பிறப்பிக்கப்பட்டும், மேற்படி விஷயங்கள் மனுதாரருக்கு நன்கு தெரிந்தும் இவ்வழக்கை அவரது பாகம் இல்லை என்று தெரிந்தும் மேற்கொண்டு இவ்வழக்கினை காலதாமதபடுத்தவேண்டும் என்கிற நோக்கில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுதாரர் மேற்படி அசல் வழக்கு எண்.50/2011 ல் இறுதி நிலை தீர்ப்பாணை குறித்து நீதீமன்ற ஆணையர் நில அளவீடு செய்யும் போது உடனிருந்தார். மேலும் மேற்படி அசல் வழக்கு குறித்து ஷை மனுதாரரை சாட்சி விசாரணை செய்யும்போது மேற்படி வழக்கு குறித்து தெரிவித்தும் மேற்படி வழக்கில் புதிதாக சேர்க்க கோரிய எதிர்மனுதாரர்களை ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. மேலும் எதிர்மனுதார்கள் பெயரில் உள்ள ஆவணங்கள் குறித்து தற்போது தான் தெரியவந்தது என்று மனுதாரர் கூறுவது பொய்யானது. மேலும் தாவா சொத்துக்கள் குறித்து ஏற்கனவே அசல் வழக்கு எண்.50/2011 ல் இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுவிட்டதால் இம்மனு மற்றும் மேற்படி வழக்கானது முன் தீர்ப்பு தடை கோட்பாட்டால் பாதிக்கப்பட்டுவிட்டது. மேலும் மேற்படி அசல் வழக்கு எண்.50/2011 வழக்கின் இறுதி நிலை தீர்ப்பாணைக்கு எதிராக எவ்வித உத்திரவும் பிறப்பிக்க இயலாது. மேற்படி வழக்கு குறித்து எவ்வித மேல்முறையீடோ அல்லது அந்த வழக்கில் மனுதாரரை சேர்க்க கோரியோ மனுதாரர் எவ்வித முயற்சியும் செய்து கொள்ளவில்லை. மேலும் ஏற்கனவே தாவா சொத்து குறித்து பாகம் வேறு வழக்கில் தீர்மானிக்கப்பட்ட பிறகு இவ்வழக்கில் இரண்டாவதாக தீர்ப்பளித்து தீர்மானிக்க இயலாது என்பதாலும், இம்மனு தற்போது அவசியமற்றது என்பதாலும் மேற்படி மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்பதே 8, 10 மற்றும் 13ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ள எதிருரைச் சுருக்கமாகும்.

3) 5, 8, 10 மற்றும் 13 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்ட போதும், மனுதாரர் தரப்பு வாதத்தை முன்னிலைப்படுத்த முன்வரவில்லை. மனுதாரர் தரப்பிற்கு எழுத்துப்பூர்வ வாதத்தை தாக்கல் செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டிருந்த போதும் எழுத்துப்பூர்வமான வாதத்தை தாக்கல் செய்யவும் இல்லை. இரு தரப்பிலும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**4) தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை :–**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே தீர்மானிக்ப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்.

**5) தீர்வு:–**

வழக்கின் ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் அசல் வழக்கு எண் 113/2018 வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்களுக்காக இந்த மனுவின் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த இடைநிலை மனு எண்.6/2025 மனுவானது இந்த மனுவின் மனுதாரரால் தாவா வழக்குரையை திருத்த வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) வழக்கின் ஆவணங்கள் மற்றும் இருதரப்பு வாதங்கள் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தாக்கல் செய்த மனுவுடன் இணைந்துள்ள பிரமாண வாக்கு மூலத்தில், இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது இந்த வழக்கின் 10 முதல் 14 வரையிலான எதிர்மனுதாரர்கள் 11.03.2008, 26.05.2008, 22.06.2009, 09.02.2011, 30.08.2011, 30.11.2011 மற்றும் 09.11.2022 ஆகிய தேதிகளில் பல ஆவணங்களை மோசடியாக உருவாக்கியுள்ளார்கள். மேற்படி ஆவணங்கள் பெயரளவிற்கு உருவாக்கப்பட்ட, செல்லாத

ஆவணங்களாகும். அந்த ஆவணங்கள் மனுதாரர்களை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்பதால், அந்த ஆவணங்கள் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கோருவதற்காகவும், அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை வழக்கில் சேர்ப்பதற்காகவும், 10 முதல் 14 எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகளாக வழக்கில் சேர்க்க அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து அது சம்பந்தமாகவும் வழக்குரையை திருத்த வேண்டியது அவசியம் என்று சொல்லப்பட்டுள்ளது.

7) கற்றறிந்த 8, 10 மற்றும் 13 எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் இந்த மனுவின் 9 வது எதிர்மனுதாரர், திருப்பூர் முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கான அசல் வழக்கு எண்.50/2011 வழக்கில் இடைமனு எண்.153/2017 என்ற மனுவில் கடந்த 01.09.2022 தேதியிலேயே இறுதிநிலை தீர்ப்பணை பிறப்பிக்கப்பட்டு விட்டது என்றும், மேற்படி விவரங்கள் தெரிந்தும் இந்த வழக்கினை மேலும் காலதாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் மனுதாரர் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து சம்பந்தமாக ஏற்கனவே இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு விட்டதால் இந்த வழக்கில் மேலும் எந்த விதமான தீர்ப்போ, உத்தரவோ பிறப்பிக்க முடியாது. இந்த வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற வாதிட்டார்.

8) இருதரப்பிலும் தாக்கல் செய்துள்ள மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள பிரமாண வாக்கு மூலத்தில் கண்டுள்ள மற்றும் எதிர் வழக்குரை ஆகியவற்றில் கண்டுள்ள சங்கதிகள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததிலிருந்தும், வழக்கு ஆவணங்களை முழுமையாக பரிசீலனை செய்ததிலிருந்தும் இந்த வழக்கின் பிரதிவாதிகள் 2016 ஆம் ஆண்டு தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைகளிலேயே மனுதாரர் இந்த மனுவில் சொல்லியுள்ள 11.03.2008, 26.05.2008, 22.06.2009,

09.02.2011, 30.08.2011, 30.11.2011 தேதிகளிட்ட ஆவணங்களை பற்றி தெளிவாக சொல்லியுள்ளார்கள். மனுதாரர் செல்லாது என விளம்புகை கோரியுள்ள ஆவணங்கள் பற்றி 2016 ஆம் ஆண்டு அவருக்கு தெரிந்திருந்தும் தற்போது 2025 ஆம் ஆண்டு தான் மேற்படி ஆவணங்கள் செல்லாது என்று விளம்புகை செய்ய வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளார்.

9) விளம்புகை பரிகாரமானது, ஆவணத்தை பற்றி தெரிய வந்த நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் 2016 ஆம் ஆண்டு மேற்படி ஆவணங்கள் பற்றி மனுதாரருக்கு தெரிய வந்தும் 2025 ஆம் ஆண்டு தான் காலதாமதமாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே வாதி மேற்படி ஆவணங்கள் தொடர்பாக விளம்புகை பரிகாரத்தை சேர்க்க வேண்டும் என்று கோரியுள்ள 11.03.2008, 26.05.2008, 22.06.2009, 09.02.2011, 30.08.2011, 30.11.2011 தேதிகளிட்ட ஆவணங்களை பொறுத்த வரிசை எண்.V A-1 முதல் A – 6 வரையிலான பரிகாரங்கள் காலவரையரையினால் பாதிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. V A-7 பரிகாரமானது அசல் வழக்கு எண்.50/2011 வழக்கில் இடைமனு எண்.153/2017 என்ற மனுவில் கடந்த 01.09.2022 தேதியில் பிறப்பிக்கப்பட்ட இறுதி நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேற்படி இறுதிநிலை தீர்ப்பணை பிறப்பிக்கப்பட்ட விவரத்தை மனுதாரர் தரப்பில் மறுக்கவும் இல்லை. எனவே, நீதிமன்றம் பிறப்பித்த இறுதிநிலை தீர்ப்பாணையின் படி தான் மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளதால், மேற்படி V A-7 பரிகாரமும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10) 10 முதல் 14 வரையிலான எதிர்மனுதாரர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றத்தில் கடந்த 2023

ஆம் ஆண்டு இடைமனு எண்.4/2023 என்ற மனுவினை மனுதாரர் தாக்கல் செய்து, மேற்படி மனு நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் மேற்படி நபர்களை சேர்ப்பதற்கு உரிய I முதல் III திருத்தங்களை மட்டும் அனுமதிக்க நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக**, இந்த மனு பகுதியாக மனு திருத்த விபரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள I முதல் III வரையிலான திருத்தங்களை பொருத்து மட்டும் அனுமதித்து உத்திரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025–ம் ஆண்டு ஜீன் மாதம் 24ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2025.06.24 17:42:16 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம்.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் : –</u>** இல்லை

V KALIDASAN
Digitally signed by V KALIDASAN
Date: 2025.06.24 17:42:32 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம்.**

இ.ம.எண்.6/2025

அ.வ.எண்.113/2008

சீரான/வரைவு தீர்ப்புரை

நாள்.24.06.2025